DEPOSITION OF WITNESS
Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, COIMBATORE

Calendar
Miscellaneous
Preliminary Register
SESSION CASE

S.C.NO.6 /2019

அ.சா.1

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION
DEFENCE
COURT

NAME : நா.செல்வம்

FATHER'S/HUSBAND NAME : கே.நாகராஜ்

VILLAGE :
TALUK
CASTE
CALLING :
RELIGION :
AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 .

23.09.2019 முதல் விசாரணை

நான் தற்போது D1 ராமநாதபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தின்போது கோவை மாநகர பி9 சரவணம்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வந்தேன். கடந்த 13.10.2015 ம் தேதி பி9 சரவணம்பட்டி காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது ஆஜர் எதிரி புவனேஷ்வரி காலை 8.00 மணிக்கு நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரினை நான் பெற்று அவருடைய தாயாரின் இறப்பு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் திரு.மகேந்திரன் அவர்களின் உத்தரவின் பேரில் பி9 காவல் நிலைய குற்ற எண்.561/2015 ச.பி.174 குவிமுச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படுகின்ற புகார் அன்றையதினம் புவனேஷ்வரி அளித்ததுதான், அந்த புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னால் பதிவு செய்யப்பட்ட முதல்

தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.2. முதல் தகவல் அறிக்கையிலுள்ள ஆஜர் எதிரி புவனேஷ்வரியின் கையொப்பம் அதசாஆ.3. (கையெழுத்து குறியீடு செய்ய ஆட்சேபணை இல்லை என எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டது). முதல் தகவல் அறிக்கையின் அசலினை கனம் வட்டாட்சியர் வடக்கு அவர்களுக்கும், ஒரு நகலினை உதவி ஆய்வாளர் திரு.மகேந்திரன் அவர்களுக்கு மேலும் புலன் விசாரணைக்காகவும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

புகார் கொடுத்த நபர் இறந்துபோனவருடைய மகள் என்றால் சரிதான். புகார் கொடுத்தவர் கணபதி ஹட்கோ காலனியில் குடியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இறந்துபோன ராஜாமணியின் முகத்தில் நான்கு அல்லது ஐந்து தலையணைகள் வைத்து மூடப்பட்டிருந்ததாக மேற்படி புகார் மனுவில் தகவல் எதுவும் இல்லை. இறந்துபோனவரின் கையில் எவர்சில்வர் டம்ளர் இருந்ததாக வாசகம் புகாரில் உள்ளதா என்றால் இல்லை. அதசாஆ.1 புகார் என் முன்பாக எழுதப்பட்டதா என்றால் இல்லை. புகார் கொடுத்த புவனேஷ்வரியுடன் குமார் மற்றும் நீலவேணி ஆகியோர்கள் வந்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

நீதிமன்ற கேள்வி

நீலவேணி, குமார் என்பவர்கள் எனக்கு தெரியுமா என்றால்

பதில்: தெரியாது.

புகார் கொடுத்த புவனேஷ்வரியுடன் வேறு நபர்கள் வந்தார்களா என்றால்

பதில்:அவருடன் மேலும் மூன்று நபர்கள் வந்தார்கள் அதில் ஒருவர் ஆண் மற்ற இருவர் பெண்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும்.